Register No. | | | | | | | | |

**FA5A** **7152–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

INDIAN PUBLIC ADMINISTRATION

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Public Administration. Explain the nature and scope of public administration.

   பொதுத்துறை ஆட்சிமுறையை வரையறுக்கவும். பொதுத்துறை நிருவாகத்தின் தன்மை மற்றும் நோக்கத்தையும் விளக்கவும்.

2. Explain the managerial view of Public Administration.

   பொது நிர்வாகத்தில் மேலாண்மையின் பார்வையை ஆராய்க.

3. Write an essay about impact of globalisation on Administration.

   நிர்வாகத்தில் உலகமயமாக்கலின் தாக்கம் குறித்து கட்டுரை எழுதுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss some of the important Organisation and Management techniques of Administrative improvement.

   நிர்வாக மேம்பாட்டிற்கான சில முக்கியமான அமைப்புமுறை மற்றும் மேலாண்மை நுட்பங்களைப் பற்றி விவாதிக்கவும்.

5. Explain the role and performance of public enterprises and its impact on liberalisation.

   பொது வணிக அமைப்புகளின் பங்கு மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கி தாராளமயமாக்குவதினால் ஏற்படும் தாக்கங்களை விளக்குக.

6. Describe the composition and functions of the Union Public Service Commission.

   மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Planning Commission.
திட்ட ஆணையம்.

(b) Integral view.
உள்ளடக்கிய பார்வை.

(c) Informal organisation.
முறையற்ற அமைப்பு.

(d) Unity of command.
கட்டளை ஒருமைப்பாடு.

(e) Bureaucracy.
அதிகார வர்க்க ஆட்சி.

(f) Audit.
தணிக்கை.

(g) Lokpal.
லோக்பால்.

PART D — (6 × 2 = 12 marks)

8. Answer SIX of the following briefly:
பின்வருவனவற்றுள் ஆறினுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:

(a) Boards and Commissions.
வாரியங்கள் மற்றும் ஆணையங்கள்.

(b) Elton Mayo.
எல்டன் மேயோ.

(c) TRAI.
ட்ராய்.

(d) Recruitment.
ஆட்சேர்ப்பு.

(e) Accounting.
கணக்கு வைத்தல்.

(f) Human Rights.
மனித உரிமைகள்.

(g) Leadership.
தலைமை.

(h) Departments
துறைகள்.

————————

Register No. | | | | | | | | |

# FA5B

7153–26

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

## JURISPRUDENCE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Law" in the light of different juristic opinions.

   "சட்டம்" என்ற சொல்லை பல்வேறு சட்ட அறிஞர்களது கூற்றுகளுடன் வரையறை செய்க.

2. Define custom and state the requirements for a custom to be accepted as a source of law.

   வழக்காற்றினை வரையறுத்து, அவ்வழக்கம் சட்ட மூலமாக ஏற்றுக் கொள்வதற்குரிய தேவைகளைக் குறிப்பிடுக.

3. Define ownership and state the different kinds of ownership.

   உடைமையுரிமை வரையறுத்து அதன் பல்வேறு வகைகளைக் குறிப்பிடுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the doctrine of 'stare decisis'.

   முன்தீர்ப்புமுறை ஏற்பு என்னும் கோட்பாட்டை விவாதிக்கவும்.

5. Define "possession". Explain the kinds of possession.

   "உடைமையை" வரையறுத்து அதன் வகைகளை விளக்குக.

6. Title to property can be acquired in different ways. What are they?

   சொத்துக்குறிய உரிமையை பல்வேறு முறைகளில் அடையப்படலாம். அவைகள் யாவை ?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Person
நபர்

(b) Proprietary rights.
சொத்து சார்ந்த உரிமைகள்

(c) Immediate possession.
நேரடி உடைமை

(d) Kinds of legislation
சட்டமியற்றுதலின் வகைகள்

(e) Right in re propria
தன் சொத்தின் மீதான உரிமைகள்

(f) Criminal Justice
குற்றவியல் நீதி

(g) Absolute duties
முழுமையான கடமைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' promised 'B' to marry her in the month of July. But 'A' married 'C' in the month of May. Did 'A' have any obligation towards 'B'?

'அ' என்பவர் ஜூலை மாதம் 'ஆ'வினை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தார். ஆனால் 'அ' என்பவர் மே மாதத்தில் 'இ'யினை திருமணம் செய்து கொண்டார். இங்கு 'ஆ'விற்காக 'அ' ஏதேனும் கடமைப்பட்டுள்ளாரா?

9. When a debt is verbally assigned by 'X' to 'Y' who is the legal owner and who is the equitable owner?

'X' என்பவர் 'Y'–க்கு வாய்மொழியாக ஒரு கடனை ஒப்படைக்கும் போது யார் சட்ட உரிமையாளர் மற்றும் தகைமை உரிமையாளர் எனக் கூறவும்?

10. 'X' keeps a lion in his house. On one day the lion escaped from the owner 'X' and caused injury to his neighbour 'Y'. Will 'X' be liable for this act?

'X' என்பவர் தனது வீட்டில் ஒரு சிங்கத்தை வளர்த்து வந்தார். ஒரு நாள் அந்தச் சிங்கம் 'X'–யிடமிருந்து தப்பி சென்று 'X'–யின் அண்டை வீட்டு உரிமையாளர் 'Y'–யை காயப்படுத்தியது. இச்செயலுக்கு 'X' பொறுப்பாவாரா?

———————

Register No. | | | | | | | | |

**FA5C**

**7154–26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

CONSTITUTIONAL LAW – I

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine the rights guaranteed to Minorities in the Constitution with decided case laws.

   அரசமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை விமர்சன ரீதியாக தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் ஆராய்க.

2. Discuss the relationship between Part - III and Part - IV of the Constitution with landmark cases.

   இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பகுதி - III மற்றும் பகுதி - IV இவற்றிற்கிடையேயுள்ள தொடர்பை வரலாற்றுச் சிறப்புமிக்க வழக்குகளுடன் விவாதிக்கவும்.

3. "Art.14 permits reasonable classification but it prohibits class legislation" – Explain with illustrative case laws.

   ஷரத்து-14-ஆனது நியாயமான வகைப்பாட்டை அனுமதிக்கிறதே தவிர வகுப்பு வகைப்பாட்டை தடைசெய்கிறது என்பதை எடுத்துக்காட்டு வழக்குகளுடன் விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the right to freedom of religion in India.

   இந்தியாவில் மதம் சார்ந்த உரிமைகளை விவாதிக்கவும்.

5. Explain the purpose of the Preamble. Whether Preamble is part of the Constitution?

   முகப்புரையின் நோக்கத்தை விளக்கவும். முகப்புரையானது அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகுமா?

6. List out the Community Welfare provisions of the Directive Principles of State Policy.

அரசுக்கு நெறியுறுத்தும் கொள்கைகள் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாய மக்கள் நலன் வகையங்களை வரிசைப்படுத்துக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Citizenship

குடியுரிமை

(b) Social Justice

சமூக நீதி

(c) Mandal Commission case

மண்டல் கமிஷன் வழக்கு

(d) Rule of law

சட்டத்தின் ஆட்சி

(e) Federal Constitution

கூட்டாண்மை அரசமைப்பு

(f) Doctrine of Eclipse

மறைதல் கோட்பாடு

(g) Rights of arrested person.

கைது செய்யப்பட்ட நபரின் உரிமைகள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Judicial Magistrate – I of Ranchi has passed sentence of 2 years against Mr. Ramana. He challenged the order of Judicial Magistrate – I of Ranchi on the ground of violation of fundamental right of freedom of movement and right to life and personal liberty. Because 'Judiciary' is coming under the ambit of Art. 12 of the Constitution. Can Mr. Ramana win the case?

திரு இரமணாவிற்கு எதிராக இராஞ்சியிலுள்ள குற்றவியல் நீதித்துறை நடுவர் - I இரண்டாண்டு தண்டனை விதித்துவிட்டார். திரு. இரமணா அவ்வுத்தரவானது அடிப்படை உரிமையான எங்கும் சென்றுவரக்கூடிய உரிமையையும், சுதந்திர உரிமையையும் மற்றும் வாழ்வாதார உரிமையையும் மீறுவதாக உள்ளதாக கூறி எதிர்க்கிறார். ஏனெனில் "நீதித்துறை"யானது அரசமைப்புச்சட்டம் ஷரத்து 12-ல் குறிப்பிட்டுள்ள வரையறைக்குள் வருகின்றது. இதில் திரு. இரமணா வெற்றி பெற முடியுமா?

9. The Central Government has issued an order to secure an equitable distribution of the imported newsprint and to curb the monopolistic tendency in newspaper industry. Thereby the Government order says – "No person other than Central Government alone shall import Newsprint". The 'IENP' newspaper company challenged the order on grounds that it violated its fundamental rights. Can the 'IENP' win the case?

செய்தித்தாள் தொழிலில் ஒரு முகத் தன்மையை போக்குவதற்காகவும், இறக்குமதி செய்யப்படுகின்ற செய்தித்தாள் அச்சிடுதற்கான தாளை அனைவருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காகவும் மத்திய அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவில் மத்தியரசு தவிர வேறு யாரும் செய்தித்தாள் அச்சிடுதற்கான தாளை இறக்குமதி செய்யக்கூடாது என பிறப்பித்தது. அந்த உத்தரவை 'ஐ.இ.என்.பி' என்னும் செய்தித்தாள் நிறுவன்ம் அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது எனக் கூறி எதிர்க்கிறது. இதில் 'ஐ.இ.என்.பி' நிறுவனம் வெற்றி பெற முடியுமா ?

10. 'Sathavagana' is a state in the Indian Union. The bifurcation Act was passed by the Parliament. The Parliament Act states that new state's capital shall be determined by the committee appointed by the Central Government. In meantime, the State Government has passed an Act to deal with 'State's Capital' matter. The same is challenged that the State Government's Act is unconstitutional one. Whether the Act made by State Government is constitutionally valid?

இந்திய யூனியனில் 'சாதவாகனா' ஒரு மாநிலம் ஆகும். மத்திய பாராளுமன்றச் சட்டத்தின் வாயிலாக இம்மாநிலமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பாராளுமன்றமானது புதிதாக தோன்றிய மாநிலத்தின் தலைநகரை குழு அமைத்து அக்குழுவின் முடிவின்படி அமைக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் மாநில அரசானது புதிய மாநிலத்தின் தலைநகரை உறுதிசெய்ய புதிய சட்டம் ஒன்றை இயற்றி முடிவு செய்கிறது. மாநில அரசின் இச்சட்டம் அரசமைப்பிற்கு முரணானது என்று மறுதலிக்கப்படுகின்றது. இவ்வாறு புதிய தலைநகரை அமைக்க புதிய மாநிலம் இயற்றிய சட்டம் அரசமைப்புச் சட்டத்தின்படி செல்லும் தன்மையுடையதா?

---

Register No. | | | | | | | | |

**FA5D** **7155–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF PROPERTY

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
★ ILLUPPUR - 622102. ★

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Covenant? Discuss the different types of covenants with case laws under the Transfer of Property Act, 1882?

வரைமொழி ஒப்பந்தம் என்றால் என்ன? சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 ஆம் ஆண்டின் கீழ் பல்வேறு வகையான வரைமொழி ஒப்பந்தங்கள் பற்றி தீர்ப்புவழிச் சட்டங்களுடன் விவாதிக்கவும்.

2. What is Doctrine of Priority? What are the exceptions to above said doctrine?

முன்னுரிமை கோட்பாட்டு என்றால் என்ன? மேலே கூறப்பட்ட கோட்பாட்டிற்கு விதிவிலக்குகள் என்ன?

3. Define Lease. What are the rights and liabilities of lessor and lessee?

குத்தகையை வரையறுக்கவும். குத்தகைதாரர் மற்றும் குத்தகைக்குக் கொடுத்தவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் என்ன?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the different types of conditions under the Transfer of Property Act, 1882? Discuss with cases.

சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 இன் கீழ் பல்வேறு வகையான நிபந்தனைகள் என்ன? வழக்குகளுடன் விவாதிக்கவும்.

5. What is rule against perpetuity? Discuss with cases.

வரையிலா நிலைக்கு எதிரான விதி என்ன? வழக்குகளுடன் விவாதிக்கவும்.

6. What is right of redemption? Who can redeem the mortgaged property?

மீட்புரிமை என்றால் என்ன? யார் அடைமான சொத்தை மீட்க முடியும்?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Subrogation

மாற்றமர் உரிமை

(b) Mortgage by conditional sale

விற்பனை அடைமானம்

(c) Rights and liabilities of Mortgagee

அடைமானம் பெற்றவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

(d) Gift

கொடை

(e) Unpaid seller

விலை பெறாத விற்பனையாளர்

(f) Official receiver

அதிகாரப்பூர்வ பெறுநர்

(g) Charge

பொருட்பிணைப் பொறுப்பு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A a buyer paid an earnest money of Rs. 2 lakhs for the purchase of a property valued Rs. 20 lakhs. But they failed to register the sale deed. How do the proposed buyer can claim the earnest money back?

ஒரு நபர் ரூ. 20 லட்சம் மதிப்பிலான ஒரு சொத்தை வாங்குவதற்காக 2 லட்சம் ரூபாய் முன்பணமாக செலுத்தினார். ஆனால் அவர்கள் விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய தவறிவிட்டனர். முன்மொழியப்பட்ட வாங்குபவர், முன் பணத்தை எவ்வாறு கோரமுடியும்?

9. 'A' mortgaged a property to 'B' and gave possession of the property for a loan amount of 8 lakhs. They agreed to use the income from the property for repayment of loan. But R came forward to pay the loan within one year. Can he redeem the property?

'அ' 8 இலட்சம் கடனுக்காக சொத்தை 'ஆ' விடம் அடைமானம் வைத்தார். 'அ' சொத்தின் சுவாதீனத்தை 'ஆ'விற்கு ஒப்படைத்தார். சொத்தின் வருமானத்தை கடனை திருப்பி செலுத்துவதற்கு பயன்படுத்த ஒப்புக்கொண்டனர். ஆனால் 'அ' ஒரு வருடத்திற்குள் கடனை செலுத்த முன்வந்தார். அவர் சொத்தை மீட்க முடியுமா?

10. Hari gifts property to Mani and after Mani to the children of Ram who were not born at the time of transfer. Is the transfer valid?

ஹரி, மணிக்கு சொத்தை பரிசாக அளிக்கிறார். ஹரி சொத்தை மணிக்கு பிறகு ராமின் பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கு பரிசாக அளிக்கிறார். இந்த உரிமை மாற்றம் செல்லத்தக்கதா?

———————

Register No. | | | | | | | | |

**FA5E** **7364–26**

(For the candidates admitted from 2017 – 2018 to 2021 – 2022)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF EVIDENCE

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "A law of evidence properly constructed would be nothing less than an application of practical experience acquired in Courts of law to the problem of enquiring into the truth as to the controverted questions of facts" – Comment.

   "சாட்சியச் சட்டமானது சரியாக பொருள் கொள்ளப்பட்டால் நீதிமன்றங்களில் பெறப்பட்ட நடைமுறை அனுபவத்தினை சற்றும் குறையாமல், முரண்பட்ட பொருண்மை சார்ந்த வினாக்கள் குறித்து உண்மையினை அறிந்து கொள்ள பயன்படுத்துவதாகும்"– கருத்திடுக.

2. Under what circumstances the acts and declarations of conspirators serve as evidence against their fellow conspirators?

   சதிகாரர்களின் செயல்களும் விளம்புரைகளும் எந்தச் சூழ்நிலைகளில் கூட்டுச் சதியாளர்களுக்கு எதிரான சான்றாக அமையும்?

3. Explain in detail the privileged communications under the Indian Evidence Act, 1872.

   இந்திய சாட்சியச் சட்டம், 1872ன் கீழ் காப்புடைச் செய்திகளைப் பற்றி விவரமாக விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. When facts not otherwise relevant become relevant?

   மற்றபடி தொடர்புற்றவையாக இல்லாத பொருண்மைகள் எப்போது தொடர்புற்றவையாக ஆகின்றன?

5. Explain the rule regarding dying declaration under the Indian Evidence Act.

இந்திய சாட்சியச் சட்டத்தின் கீழ் மரண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்வது குறித்த விதியினை விளக்குக.

6. Discuss the relevancy of character of a person in civil and criminal cases.

உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஒரு நபரின் குண இயல்பின் தொடர்பு பற்றி விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Conclusive proof

அறுதியான நிரூபணம்

(b) Estoppel

முரண்தடை

(c) Secondary evidence

இரண்டாம் நிலை சான்று

(d) Ancient documents

தொல் ஆவணங்கள்

(e) Leading questions

விடை அமை வினா

(f) Motive

நோக்கம்

(g) Expert opinion

வல்லுனர் கருத்துரை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. In a murder trial, evidence is sought to be given of signs made by the deceased in answer to questions put to him about the persons who caused the fatal injuries. Is it admissible?

ஒரு கொலைக்குற்ற வழக்கு விசாரணையில் மரணம் விளைவித்தவர்கள் யார் என்ற கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இறந்து போனவர் காட்டிய சைகைகளைச் சாட்சியமாக அளிக்க முனைகின்றனர். இது ஏற்புடையதா?

9. ‘A’ agreed in writing, to sell his car to ‘B’ for Rs. 3,00,000/- or Rs. 4,00,000/-. ‘B’ wants to lead evidence to show the price as Rs. 3,00,000/-. Can he do so?

ரூ. 3,00,000/- அல்லது ரூ. 4,00,000/-க்கு தன்னுடைய மகிழுந்தை ‘B’க்கு விற்க எழுத்து மூலம் ‘A’ ஒப்புக்கொண்டார். விலை ரூ. 3,00,000/- தான் எனக்காட்ட சாட்சியம் கொடுக்க ‘B’ வேண்டினார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

10. ‘A’ sues ‘B’ upon a bond for the payment of money. ‘B’ denies the making of the bond. Whether the fact that, at the time when the bond was alleged to be made, ‘B’ required money for his daughter’s marriage is relevant?

கடன் உறுதிமொழி ஆவணத்தின் பேரில் கடன் பெற்றது தொடர்பாக அதனை திருப்பிப் பெற ‘B’ என்பவர் மீது ‘A’ வழக்கு தொடுக்கிறார். ‘B’ உறுதிமொழி ஆவணத்தை எழுதிக்கொடுத்ததை மறுக்கிறார். கடன் உறுதிமொழி ஆவணம் எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்ட சமயத்தில் ‘B’க்கு அவருடைய மகளின் திருமணத்தை நடத்த பணம் தேவைப்பட்டது என்பது தொடர்புடைய சங்கதியா?

Register No. | | | | | | | | |

# FA5F

**7156-26**

(For the candidates admitted from 2022 – 2023 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Five – year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM, 2023

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the significance of "may presume", "shall presume" and 'conclusive proof" in the Bharatiya Sakshya Adhiniyam.

   பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தில் காணப்படும் "அனுமானிக்கலாம்", "அனுமானித்தல் வேண்டும்" மற்றும் "அறுதியிட்டு கூறுதல்" என்னும் பதங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

2. What are the provisions embodied in Bharatiya Sakshya Adhiniyam regarding confession? Explain.

   குற்ற ஏற்புரை குறித்து பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் யாவை? விளக்குக.

3. Explain the nature of privileged communications under Bharatiya Sakshya Adhiniyam.

   பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் காப்புடைய செய்திகளின் தன்மையை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the doctrine of Estoppel.

   முரண்தடை கோட்பாட்டை விளக்கவும்.

5. What is meant by 'leading question'? When it can be and cannot be asked?

   'விடை பொதி வினா' என்பதன் பொருள் என்ன? அவைகளை எப்போது கேட்க முடியும் மற்றும் எப்போது கேட்க முடியாது?

6. Enumerate the facts which need not be proved under Bharatiya Sakshya Adhiniyam?

பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் கீழ் மெய்ப்பிக்கப்பட வேண்டாத பொருண்மைகள் எவையென பட்டியலிடுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Relevant fact

தொடர்புடைய பொருண்மை

(b) Alibi

வேற்றிட வாதம்

(c) Judgment in rem

பொருள் சுட்டியத் தீர்ப்புரை

(d) Latent ambiguity

உட்கிடை பொருள்மயக்கம்

(e) Res gestae

ஒன்றிய செயல்

(f) Refreshing memory

நினைவை புதுப்பித்தல்

(g) Impeaching credit of witness

சாட்சியின் நன்மதிப்பை முறியடிப்பது

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is charged with sending threatening letters to 'B'. Whether the threatening letters previously sent by A to B can be proved as showing the intention of the letters?

'A' என்பவர் 'B' என்பவருக்கு மிரட்டல் கடிதங்கள் எழுதியதாக குற்றம் சாட்டப்படுகிறார். 'A' ஆனவர் 'B'–க்கு இதற்கு முன் அனுப்பிய மிரட்டல் கடிதங்களை உள் நோக்கத்தை நிரூபிக்க பயன்படுத்த முடியுமா?

9. 'A' sues 'B' for money due on a bond. The execution of the bond is admitted but 'B' says that it was obtained by fraud, which 'A' denies the same. State on whom does the burden of proof lie?

பத்திரம் ஒன்றின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய பணத்திற்காக 'B'ன் மீது 'A' என்பவர் வழங்கிடுகிறார். பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அது மோசடியாகப் பெறப்பட்டது என்று 'B' கூறுகிறார். அதை 'A' மறுக்கிறார். இங்கு நிரூபிக்கும் பொறுப்பு எவர் மீது உள்ளது?

10. A client says to his advocate – "I wish to obtain possession of property by the use of a forged deed on which I request you to sue". Is this communication protected from disclosure?

ஒரு கட்சிக்காரர் தன்னுடைய வழக்கறிஞரிடம், "போலி ஆவணத்தை பயன்படுத்தி ஒரு சொத்தை அடைய விரும்புகிறேன், அந்த ஆவணத்தின் மீது வழக்காட வேண்டுமென்று உங்களை வேண்டுகிறேன்" என்று கூறுகிறார். இந்த செய்தி காப்புடைய செய்தியாகுமா?